பக்கங்கள் 15+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 02 புதன்கிழமை 15.05.2024 அதிர்வு 289

## யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதர்



(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)



# வேதனையோடும் நீதி எதிர்பார்ப்போடுமே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

## சம்பூர் சம்பவத்துக்குப் பொதுக்கட்டமைப்புக் குழு கடும் கண்டனம்

(ந.லோகதயாளன்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வேதனை யோடும் நீதி எதிர்பார்ப்போடும் செய்கின்றோம் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையின் பேரினவாத அரச படைகளி னதும் பொலிஸாரினதும் புலனாய்வுத்துறையி னரதும் பல்வேறு அடக்குமுறை, நெருக்குதல்க ளுக்கு மத்தியில் போர் வலி சுமந்த மக்களாக போரில் கொல்லப்பட்ட, இறந்த எம் உறவுகளுக்காக கடந்த 14 வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினை வேந்தலை வேதனையோடும் நீதி எதிர்பார்ப்போடும் செய்கின்றோம்.

04

# குமுதினிப் படகு படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நிகழ்வு!

## நெடுந்தீவில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு



(விரிவான செய்தி 5ஆம் பக்கத்தில்)

# பரீட்சை எழுதிய இரு மாணவிகள் வீடு திரும்பவில்லை

(மஸ்கெலியா நிருபர்)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மத்திய நிலையத்துக்கு வருகை தந்த பாடசாலை மாணவிகள் இருவர், வீட்டுக்குத் திரும்ப வில்லை என அந்த மாணவி கள் இருவரின் பாதுகாவலர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித் தனர்.

இவ்விரு மாணவிகளும் நேற்று செவ்வாய்க்கிழமை பரீட் சைக்குத் தோற்றுவதற்காக, பரீட்சை மத்திய நிலையத் துக்கு வந்திருந்தனர்.

04



# திருநாவற்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

(கே.வசந்தன்)

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி வவுனியா, திருநாவற்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

திருநாவற்குளம் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை திருநாவற்குளம் பிரதான வீதியில் வைத்து இன்று வழங்கினர்.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கி பருகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதுவர்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று விஜயம் செய்தார்.

"வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கான தொடர்ச்சியான அமெரிக்க ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கான வழிகளை ஆராய்வதற்காகச் சிவில் சமூகம், இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட கண்ணோட்டங்களைக் கேட்பதற்காக இந்த வாரம் நான் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளேன்." – என்று அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.


யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் விவசாய மாணவர்களுடன் மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பு மற்றும் மரங்களை நடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்வு இன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.











# 15 வயது சிறுமி மீது கூட்டு வன்புணர்வு: விடுதி முகாமையாளர் இன்று கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து 15 வயது சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விடுதி முகாமையாளர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 15 வயது பெண் ஒருவரை வவுனியா நகரை அண்டிய தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்ற இளைஞர் ஒருவர் மேற்படி சிறுமிக்குப் பாதை மருந்து கொடுத்து கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தினார். அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட பெண் உட்பட 4 பேர் அண்மையில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் வவுனியா பொலிஸார், சம்பவம் இடம்பெற்றது எனக் கூறப்படும் தேக்கவத்தைப் பகுதியில் உள்ள விடுதியின் முகாமையாளரைக் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வேதனையோடும்...

போர்க்காலத்தில் பட்டினிச் சாவைத் தவிர்ப்பதற்காக செல்லடினாலும், குண்டுத் தாக்குதலினாலும் ஆங்காங்கே இரத்த வெள்ளத்தில் சதைப் பிண்டங்களாக உறவுகள் வீழ்ந்து கிடக்கக் கஞ்சிக்கு வரிசையில் நின்றதை மறக்க முடியாதவர்களாக ஒவ்வொரு வருடமும் உப்புக்கஞ்சி பகிர்ந்து நினைவுகளை மீட்கின்றோம். அவ்வாறே இவ்வருட நினைவேந்தலில் ஆரம்ப நாளில் கஞ்சி பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சம்பூரில் மூன்று பெண்கள் உட்பட நால்வரைக் கைது செய்து சி.சி.பி.ஆர். இன் கீழ் 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர் சம்பூர் பொலிஸார்.

இது போரின் வலி சுமந்து நீதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் அனைத்து தமிழர்களையும் மௌனிக்கச் செய்து தண்டிக்கும் இனவாத வன்முறையாகும். இதனை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதோடு குற்றம் சாட்டப்பட்டவர்களை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவித்து உடனடியாக விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் இனியும் நடக்க இடம் கொடுக்கக் கூடாது எனவும் கூறுகின்றோம்.

கஞ்சி பகிர்தல் எந்த வகையில் இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும்? என்று கேட்பதோடு ஒன்றுகூடுதல் மற்றும் கஞ்சி பகிர்தல் மூலம் தொற்றுநோய் பரவுமென யாரால் அறிவித்தல் விடுக்கப்பட்டது? எனவும் சாம்பூர் பொலிஸாரிடம் கேட்கின்றோம். அங்கு பொலிஸார் பெற்றுக்கொண்ட தடை உத்தரவின் அடிப்படை நோக்கம் இனவாதமாகும். இதுவே இனமுறுகலைத் தோற்றுவிக்கும் செயற்பாடு. இத்தகைய குற்றத்தை செய்த சம்பூர் பொலிஸார் எந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவர்.?

போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்ட நாட்டில் இனப்படுகொலை, துன்பியல் நினைவுகளோடு இன அழிப்புக்குத் தொடர்ந்தும் முகம் கொடுத்தவர்களாக நினைவேந்தலைச் செய்யும் நாம் நீதிக்கான ஆயுதமாக கஞ்சியையும், கஞ்சி சிரட்டையுமே தூக்கி நிற்கின்றோம். இதனை இனவாத நோக்கத்தில் சட்டத்தின் துணைகொண்டு தட்டிப் பறிக்கும் செயற்பாடானது புத்தரின் போதனையை மிதித்து அவரின் பிச்சா பாத்திரத்தையே தட்டிப் பறிப்பதற்குச் சமமாகும் என இந்த வைகாசி விசாக மாதத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

இவ்வருடம் எதிர்வரும் கிழமையில் பௌத்தர்களின் வெசாக் பண்டிகையைக் கொண்டாடவிருக்கின்றனர். அப்போது தெற்கில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கிலும் பௌதர்களும், சிங்கள பௌத்த இராணுவத்தினரும் வீதிகளில் தான சாலைகளை அமைத்து வீதியில் பயணிக்கும் மக்களை நிறுத்தி குளிர்பானங்களையும், உணவுகளையும் பகிர்வர். தொற்றுநோய் பரவும் என அப்போதும் சம்பூர் பொலிஸார் இதனைச் செய்யவிடாது தடுப்பார்களா? யாராவது நீதிமன்றத் தடை உத்தரவைப் பெறுவார்களா? இல்லையே. தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரின் தர்ம சாலைகளையும், பௌத்த பாராயணம் ஒலிபெருக்கி சத்தங்களையும் இன முரண்பாட்டுக்கு உரிய ஒன்றாகவே நாம் பார்க்கின்றபோதும் அதற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாடவில்லை. இன, மத நல்லிணக்கமென நாமும் அமைதி கொள்ளும்போது எம்மைச் சீண்டிவிடும் செயற்பாட்டில் எவரும் ஈடுபடக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

தமிழர்களுக்கு இந்த நாட்டில் நீதி கிட்டப் போவதில்லை என்பதற்குச் சம்பூர் சம்பவமே மிக அண்மைய நல்ல முன் உதாரணமாகும். இதனைச் சர்வதேசம் உணர்ந்து தமிழர்களுக்குக் போர்க்குற்றங்களுக்கான நீதியையும் அரசியல் நீதியையும் பெற்றுக்கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று முள்ளிவாய்க்கால் 15 ஆம் நினைவு ஆண்டில் மீண்டும் வலியுறுத்துகின்றோம்." – என்றுள்ளது.

### பரீட்சை ஒழுதிய...

அதில் ஒரு மாணவி, பெற்றோருடன் பரீட்சை மத்திய நிலையத்துக்கு வந்திருந்தார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பாத இரண்டு மாணவிகளும் நண்பிகள் என்றும், பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் பரீட்சை மத்திய நிலையத்துக்கு அண்மையில் இவ்விருவரும் நீண்ட நேரம் கதைத்து கொண்டிருந்ததை பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகள் பலரும் கண்டுள்ளனர் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குமுதினிப் படகு படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நிகழ்வு!

## நெடுந்தீவில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நெடுந்தீவு குமுதினிப் படகு படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினிப் படுகொலை நினைவுத் தூவியில் நடைபெற்றது

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது

பசுந்தீவு ருத்திரன் எழுதிய குமுதினிப் படுகொலை நினைவுகளைச் சுமந்த ”உப்புக் கடலை உரசிய நினைவுகள்” என்ற கவி நூல் வெளியீடும் நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமுதினிப் படகில் இடம்பெற்றது. நூலை சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் வெளியிட்டு வைத்தார்.

குமுதினிப் படகில் இருந்து கடலில் மலர்தூவி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முள்ளிவாய்க்கால் நினைவுகளைச் சுமந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது

உயிரிழந்தவர்களின் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் இருந்து புங்குடுதீவு – குறிகாட்டுவான் நோக்கிக் குமுதினிப் படகில் மக்கள் பயணித்தபோது கடற்படையினரால் ஏழு மாதப் பெண் குழந்தை, பெண்கள் உட்பட 36 பேர் நடுக்கடலில் வைத்துப் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வில் சிவகுரு ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன்சுவாமிகள், நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.பத்திநாதன், மதத் தலைவர்கள், குமுதினிப் படகு படுகொலையில் உயிழந்தவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அம்பலமாகும் கோர முகம்

ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் இது மிக முக்கியமான வாரம். அவர்களின் தேசத்தின் ஆன்மாவையே மிகக் கொடூரமாக நோகடித்து உலுப்பிப் போட்ட முள்ளிவாய்க்கால் பேரழிவின் நினைவழியா நாள்கள் இவை.

முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்றது மானுடப் பேரவலம். காலப்பெருந்துயரம்.

கொத்துக்கொத்தாய் கொன்றொழிக்கப்பட்ட ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பேரவலச் சரித்திரம் - நம் இனத்தின் குருதியால் எழுதப்பட்ட வரலாற்று சுவடு - அங்கு தான் பரவிக் கிடக்கின்றது.

ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் மறக்கவும் முடியாத - மன்னிக்கவும் இயலாத - கொடூரமாய் அது நமது மனக்குகையில் ஆழ ஊன்றிப் பதிந்துள்ளது.

அண்டை நாடு முதல் ஐ.நா. சபை வரை வேடிக்கை பார்த்திருக்க, பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் மிருகத்தன வெறிப்போக்கு, தமிழினத்தில் பிஞ்சுக் குழந்தை முதல் வயதானவர்கள் வரை, தாய்மார், சகோதரிகள், மூத்தோர் எனப் பல்லாயிரம் அப்பாவிகளின் உயிர்களையும் இரத்தக் காட்டேரியாய் பேயுருக் கொண்டு, கொன்று குடித்த குரூரம் அங்குதான் அரங்கேறி அடங்கியது.

முள்ளிவாய்க்காலை மிதிக்கும் ஒவ்வொரு ஈழத் தமிழனின் உள்ளத்திலும் காதுகளிலும் அங்கு சிதறிப் பலியாகிப்போன நம்மவர்களின் ஈன, அவலக் குரலே ஒலிக்கும்.

துடிதுடித்து இறந்து போன நம்மவர்களின் ஆன்மாக்கள் இந்த வைகாசி மாதத்தில் அவர்தம் உறவுகளின் - இனச் சகோதங்களின் - வருகைக்காக ஏங்கிக் காத்துக் கிடக்கும் என்பது நம் நம்பிக்கை.

அந்த நம்பிக்கையோடு நினைவேந்தச் செல்லும் தமிழ் மக்களுக்கு, அந்தக் கொடூரங்களை ஈவிரக்கமின்றி மிருகத்தனமாக புரிந்த சிங்களப் பேரினவாதம் நினைவேந்தக் கூட அனுமதிப்பதாக இல்லை.

அப்படி நினைவேந்த அனுமதிப்பது சிங்களப் பேரினவாதம் புரிந்த இனவழிப்புக் கொடூரத்தை ஏற்று அங்கீகரித்ததாகிவிடும் என்ற குற்ற உணர்ச்சி போலும் அந்த இனவெறிப் போக்காளர்களுக்கு.

முள்ளிவாய்க்கால் பேரவலம் முடிவுற்று இந்த 15 ஆண்டுகளாக, அப்படி மறைந்த தமது உறவுகளுக்கு நினைவேந்தக் கூடப் போராட வேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

நல்லிணக்கம், இன சமரசம், அமைதித் தீர்வு என்ற முகமூடிகளை அணிந்தபடி, அரசியல் வேடமிட்டு உபதேசங்கள் புரியும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியிலும் அந்த இனவெறிப் போக்கு - நினைவேந்தலுக்கு அனுமதிக்காத பேரினவாதத் திமிர்த்தனம் - முழு அளவில் கட்டவிழ்வது வேதனைக்குரியது.

தத்தமது இடங்களிலேயே அந்த உறவுகளுக்கு நினைவேந்தல் செய்யும் விதத்தில் நம்மவர்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்வதைக் கூட, புலிகளின் மீளுருவாக்கம், இனங்களுக்கு இடையில் குரோதத்தை ஏற்படுத்தும் தீவிரச் செயற்பாடு என்றெல்லாம் பொய் முலாம் பூசி, நினைவேந்தலைக் கொச்சைப்படுத்துகிறது ரணில் - ராஜபக்ஷ அரசின் வழிகாட்டலில் இயங்கும் பொலிஸ் துறை.

இம்முறை - வருகின்ற 18 ஆம் திகதி வரையான - நினைவேந்தல்களையும், அன்றைய தினம் முள்ளிவாய்க்காலில் இடம்பெறப் போகும் 15 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளையும், பௌத்த - சிங்களப் பேரினவாதம் வழமை போல மேலாண்மை வெறிப் போக்கில் அடக்கி ஒடுக்க முயலும் என்பது திண்ணம். ரணில் - ராஜபக்ஷ அரசின் வழிகாட்டலில் இயங்கும் பொலிஸ் இன்னும் மோசமாகவும் முரட்டுத்தனமாகவும் விடயங்களைக் கையாளும். நினைவேந்தலை புலி மீளுருவாக்கம் என்று அர்த்தப்படுத்தும். முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறுவது சுகாதார சீர்கேடு என்று கொச்சைப்படுத்தும். பொலிஸின் அந்தப் போலி அர்த்தப்படுத்தல்கள் எல்லாவற்றையும் பல நீதிமன்றங்கள் கேட்டுக் கேள்வியின்றி அங்கீகரித்து, அந்தக் கொடூரத்துக்கு தோன்றாய்த் துணையாகும்.

எனினும் ஈழத் தமிழர்கள் தளராத உறுதியோடு தம் உறவுகளுக்கான அந்த நினைவேந்தல் கடனை ஆற்றுவர் என்பதும் உறுதி.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தமிழர் தரப்பின் அரசியல் தலைவர்களோடு சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் அக்னஸ் கால்மாட் அம்மையாரும் நேரடியாகப் பிரசன்னமாகி இருப்பார்.

எங்கள் நினைவேந்தல் சிங்களத்தின் பேரினவாத வெறிப்போக்கு கோர முகத்தை மீண்டும் மீண்டும் உலகுக்கு அம்பலப்படுத்தி நிற்கும்.



# கல்முனை வடக்கு செயலக விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்கு சென்றது

## நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவிப்பு



( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் குழுவினர் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (14) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் மன்னர் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், சமூக செயற்பாட்டாளரும் மாணவர் மீட்பு பேரவை தலைவருமான செல்வராஜா கணேசானந்தம், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் க. சிவலிங்கம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேச தலைவர் கே.ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதன்போது, கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றது. விரிவான மகஜரும் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான கணக்காளர் நியமித்தல் மற்றும் புதிய கணக்கு ஆரம்பித்தல் தொடர்பாக ஆரம்பத்தில் விரிவாக பேசப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று அழுத்தமான கோரிக்கையை கோடீஸ்வரன் முன்வைத்தார்.

அப்படி அதனை செய்யும் பட்சத்தில் தங்களுக்கான ஆதரவை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் முழுமையாக வழங்குவார்கள் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி அதனை பரிசீலிப்பதாகவும் பிரதமருடன் கலந்துரையாடி இதனைச் செயல்படுத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில் போன்ற பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதாக குழுவினரால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால் கடல் தொழில் புரிகின்ற ஏனைய விவசாயத்துடன் தொடர்புபட்ட தமிழ் மக்கள் சுமார் 15 ஆயிரம் பேர் நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். அது மட்டுமல்ல கடல் வளம் முருகைக் கற்கள் மீன்பிடி போன்றன பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதனை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்த இடத்தில் தொலைபேசி தொடர்பு கொண்டு பணிப்புரை விடுத்தார்.

மேலும் புதிய உள்ளூராட்சி சபைகளை ஏற்படுத்துவது தொடர்பாக பேச்சு இடம் பெற்றது.

குறிப்பாக பொத்துவில் வடக்கை மையமாக வைத்து ஒரு பிரதேச சபையும் சம்மாந்துறை மேற்கு தமிழ் பிரதேசங்களை மையமாக வைத்து மல்வத்தை பிரதேச சபையும் ஏற்படுந்தப்படுவதன் அவசியத்தையும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளை உள்ளடக்கியதாக ஒரு புதிய வலயம் உருவாக்குவது தொடர்பாகவும் பேசப்பட்டது.

அடுத்து தமிழர் பிரதேசங்கள் பொதுவான நிதிப்பங்கீட்டில் பாரிய புறக்கணிப்பை எதிர் நோக்கி வருகின்றது. தமிழர் பிரதேசங்களில் இணைப்பு குழு தலைவர்களாக பிறர் இருப்பதால் இந்த புறக்கணிப்பு, பாரபட்சம் இடம் பெறுவது சுட்டிக்காட்டப்பட்டது.

திருக்கோவில் ஆதரவைத்திய சாலை பெயரளவில் நான்கு ஐந்து வைத்தியர்களுடன் இயங்குவதாகவும் அங்கு உண்மையில் 25 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர் என்றும் ஏனைய வைத்திய உபகரணங்கள் அங்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச பெரிய களப்பில் கடல் நீர் கலப்பதால் ஏற்படும் பாதிப்பு பற்றி கூறப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக இங்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை படிப்படியாக செய்வதாக ஜனாதிபதி இதன்போது உறுதி அளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# சிவனொளிபாத மலைக்கு பிளாஸ்ரிக் கொண்டு செல்வதைக் கட்டுப்படுத்துக!



(மஸ்கெலியா)

பக்தர்களால் சிவனொளிபாத மலைக்கு கொண்டு செல்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பூஜை பொருள்கள் அடங்கிய பொதி மற்றும் சிவனொளி பாத மலை உச்சிக்கு பக்தர்கள் கொண்டு செல்லும் பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற மக்காத கழிவுகள் பொன்றவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனையை கடுமையாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மலையக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு பருவகாலம் யாத்திரையின் போது லட்சக்கணக்கான பிலாஸ்டிக் பாக்கெட்டுகள், டன் கணக்கில் பிளாஸ்டிக் போத்தல்களை பக்தர்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அவற்றை மலை உச்சியில் விட்டுச் செல்வதால் சிவனொளிபாத மலை உச்சிப் பகுதிகளில் அவற்றை அகற்றுவதில் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

பிளாஸ்டிக் போத்தல்கள் அல்லாத ஏனைய தயாரிப்பில் மக்கும் பொருள்களை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிவனொளிபாத மலை மற்றும் அதனை சுற்றியுள்ள வனப் பகுதியில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்க முடியும் என்றும் மலையக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

பிளாஸ்டிக் கவர்கள் மற்றும் இதர பிளாஸ்டிக் போத்தல்கள், குவிந்து கிடக்கும் குப்பைகள், பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள், குடிநீர் போத்தல்கள், பிளாஸ்டிக் கப்கள் உள்ளிட்ட மக்காத திண்மக் கழிவுகளை அகற்ற ஆண்டு தோறும் அரசு பெரும் பணம் செலவழிப்பதாக கூறப்படுகிறது.

பல்வேறு உணவுப் பொருள்களின் பொலித்தீன் கவர்கள் சிவனொளி பாத மலை உச்சிவரை கொண்டு செல்லப்படுவதைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிளாஸ்டிக் பொருள்களது பாவனையை இப்போதே கட்டுப்படுத்தா விடின் அடுத்த சில ஆண்டுகளில் கடுமையான சுற்றுச்சூழல் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும் எனவும் எமது அடுத்துவரும் சந்ததியினர் இவ்வாறான புனித தலமான சிவனொளிபாத மலையைப் பார்க்க முடியாத நிலைக்கு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.





# புத்தளம் பொது அமைப்புக்களால் கௌரவிக்கப்பட்ட மோகன் சுவாமி!

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் புத்தளம் சேனைக் குடியிருப்பு பொது அமைப் புக்களால் கடந்த வெள்ளிக்கிழமை கௌரவிக்கப்பட்டார்.

பல இன மக்களும் வாழும் புத் தளம் சேனைக்குடியிருப்பில் பல்வேறு நிவாரண உதவிகள், மாணவர்க ளுக்கான கல்விச் செயற்றிட்ட உதவி கள், அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகள், ஆலயங்களில் கட்டுமா- னப் பணிகளுக்கான நிதிக் கொடுப்ப- னவுகள் போன்றவற்றை தொடர்ச்சியாக மேற்கொண்டமைக்காகவே இவர் கௌர விக்கப்பட்டார்.

புத்தளம் சேனைக்குடியிருப்பு மக்களால் 'சமூகச்சுடர்' என்ற விருது இதன்போது வழங்கப்பட்டது. வாழ்த்து மடல், நினைவுச் சின்னம் என்பனவும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சமூகசேவையாளரும் புத்தளம் பிரஜா பொலிஸ் ஆலோ



சகருமான சுப்பையா மகேந்திரன், புத்தளம் ஓய்வுபெற்ற வைத்தியர் மு. திருச்செல்வம், பெரும்பான்மை இனத்தை சார்ந்த திரிய சக்தி திரிய வனிதா சங்க தலைவர் திருமதி க.நி- மாலி ரேணுகா சுபசிங்ஹா மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதி களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிர மத்தின் சைவ கலை பண்பாட்டு பேர வையின் வாராந்த நிகழ்வும் இடம் பெற்றது.

இதில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக 40 ஆயிரம் ரூபா நிதியும், தொண்டை மானாறு இந்து அபிவிருத்தி நிலை யத்தினரின் கோரிக்கைக்கு அமை வாக, அறநெறி மாணவர்களை திருக் கேதீச்சரம் அழைத்து செல்வதற்காக 50 ஆயிரம் ரூபா நிதியும், பண்டார வளை, அப்புத்தளை விஹாரகலை தமிழ் வித்தியாலயத்துக்குப் படிக் கட்டு கட்டுமானப் பணிக்காக முத லாம் கட்டமாக ஒலு லட்சம் ரூபா நிதி யும் வழங்கப்பட்டது.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் அபிவிருத்திப் பணிக்கு நிதி ஒதுக்கீடு!

## ஹரீஸ் எம்.பி. வழங்கினார்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்தில் மட்டு மன்றி தேசிய ரீதியாகவும் புகழ்பெற்ற மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூ ரிக்கு நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் விஜயம் செய்து பாடசாலையின் கல்வி அடைவு மட்டங்கள், பௌதீக மற்றும் ஆளணி விடயங்கள், கல்வி மேம்பாட்டு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

கல்லூரி முதல்வர் எம்.எம். ஹிர் பஹான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, ஆசி ரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் மற்றும் உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க செயலாளர் மற்றும் பிரதிநிதி கள் என பலரும் கலந்து கொண்டு பாடசாலையின் மேம்பாட்டு விடயங் கள் மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பில் ஹரீஸ் எம்.பியுடன் கலந் துரையாடினர்.

பாடசாலையின் மைதான தேவை கள், சிற்றுண்டிச்சாலை புனர்நிர்மாணம்



உட்பட பல்வேறு விடயங்களை எடுத் துரைத்தனர்.

இதன்போது மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மேம்பாட்டுக்க- ாக, ஹரீஸ் எம்.பியால் ஒதுக்கப்பட்ட நிதிக்கான ஆவணத்தை பாடசாலை அதிபர் எம்.எம்.ஹிர்பஹானிடம் அவர் கையளித்தார்.

இதன்போது அல்- ஹம்ரா வித்தி யாலயம், கிரீன் மக்ஸ் விளையாட்டுக் கழகம், பிரைட் பியூச்சர் விளையாட்டுக் கழகம் போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு கடிதமும் கையளிக்கப்பட் டன.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம். எம். உமர் அலி, நாடாளுமன்ற உறுப பினரின் ஆலோசகர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம், மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிர முகர்கள் பலரும் கலந்து கொண்ட னர்.



# மலையக பகுதிகளில் உள்ள பல வீதிகள் பெரும் சேதம்!

## திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை



(மஸ்கெலியா )

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மலையக பகுதிகளில் உள்ள பல தோட்டங்களின் உள் வீதிகள் பல தற்போது மோசமான நிலையில் காணப்படுகின்றன.

போக்குவரத்து நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ள முடியாமல் கடும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்று தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மழை பெய்யும் போது குறிப்பிட்ட தோட்ட வீதிகளில் நடந்து கூட செல்ல முடியாத வகையில் பெரிய நீர் ஓடைகள் வீதிகளில் ஓடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் இவ்வாறான தோட்டங்களில் வசிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட நோய்வாய்ப்பட்ட மக்கள், மற்றும் முதியோர் தங்களது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதில் கடும் சிரமங்களையும், பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர்.

பழுதடைந்த வீதிகளில் வாகனங்களை செலுத்துவதில் சிரமம் காணப்படுகிறது.

இதனால் பல விபத்துகளும் ஏற்படுகின்றன.

கர்ப்பிணித் தாய்மார் இடை நடுவில் குழந்தை பிரசவிக்கும் நிலைமைகளும் ஏற்படுகின்றன.

இதன் காரணமாக மத்திய மலைநாட்டில் உள்ள பெருந்தோட்ட, சிறு தோட்டத்தின் உட்பகுதியில் பழுதடைந்துள்ள தோட்ட வீதிகளை உரிய திணைக்களங்கள் விரைவில் சீர் செய்யுமாறு தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனை வடக்கு பிரதேசத்துக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி!



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரியாக, மருதமுனை பிரதேசத்தை சேர்ந்த பஹட் ஸமான் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் அலுவலகத்தில் வைத்து அமைச்சர் விஜயதாச ராஜபக்சவிடம் இந்த நியமனத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவருக்கு 15.05.2024 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.




# மாற்று ஆற்றல் படைத்தோருக்கு பரா மெய்வல்லுனர் போட்டிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாற்று ஆற்றல் படைத்தோருக்கான பரா மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் தியகமவில் இடம்பெற்றன.

அண்மையில் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம் பெற்றன.

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த மாற்று ஆற்றல் படைத்த படைத்த பலர் தமது திறமைகளை வெளிப்படுத்தி பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.





# கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி!

(ரஸீன் ரஸ்மின்)

முல்லைத்தீவைச் சேர்ந்த மௌலவி லெப்பை தம்பி நிபாஸ், கரைதுறைப்பற்று பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி, மற்றும் சிறைச்சாலைகள், அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இவருக்கான நியமனக் கடிதத்தை கையளித்தார்.

நீதி, மற்றும் சிறைச்சாலைகள், அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகாரங்களுக்கான இணைப்பாளரும், வவுனியா சிறைச்சாலை மேற்பார்வையாளர் குழுத் தலைவருமான சிறாஜுதீன் நிப்றாஸ் முஹம்மதின்



சிபாரிசுக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சமாதான நீதவானான இவர், முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம் விவாக பதிவாளராகவும் தற்போது கடமையாற்றி வருகின்றார்.



# மன்னார் உயிலங்குளம் ஆஸ்பத்திரிக்கு புலம்பெயர் உறவுகளின் மருத்துவ உதவி

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் ஆரம்ப வைத்தியசாலைக்கு தேவையான ஒரு தொகுதி மருத்துவப் பொருள்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (14) கையளிக் கப்பட்டுள்ளன.

இந்த வைத்தியசாலைக்குப் பொறுப் பான வைத்தியர் துஷ்யந்தனின் கோரிக் கைக்கு அமைய 2 லட்சத்து 50 ஆயி ரம் ரூபா பெறுமதியான நோயாளிக ளுக்கு அவசியமான சில பொருள்கள் வழங்கப்பட்டன.



இந்த வைத்திய சாலைக்கு 50 மேற் பட்டவர்கள் சிகிச்சைக்காகவும், பல் வேறு நோயாளர்கள் 200 பேர் வரை யில் நாளாந்தம் கிளினிக்குக்கும் வந்து செல்கின்றனர்.

இதன் போது மன்னார் பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் ஒஸ்மன் டெனி கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# அம்பாறை பெண்கள் வலையமைப்பின் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களைச் சமூகத்தில் சிறந்த மனிதர்களாகவும் தலைமைத்துவம் கொண்டவர்களா கவும் உருவாக்கும் ஒரு அங்கமாக அம்பாறை மாவட்ட பெண்கள் வலை யமைப்பின் ஏற்பாட்டில் நேற்று (14) கல்முனை பிரதேச செயலக கேட் போர் கூடத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்தோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

கல்முனை பிரதேச செயல நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீல் நெறிப் படுத்தலில் கல்முனை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை, நற் பிட்டிமுனை, கல்முனைக்குடி ஆகிய கிராம பிரிவுகளைச் சேர்ந்த 8 பெண் குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிக் கான காசோலைகள் வழங்கப்பட்டன.

வாழ்வாதார உதவிக்கான காசோலை கள் இனிப்பு பண்டம் தயாரித்தல், கதவு யன்னல் அலங்கார சீலைகள் தயாரித்தல், கருவாடு பதனிடல், இரவு உணவு தயாரித்தல், தையல் மற்றும் தோற் பை, புத்தக பை தயாரித்தல் உள்ளிட்டவைக்கு வழங்கப்பட்டன.

இதன்போது அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு இணைப்பா ளர் கலைவாணி தயாபரன், நிர்வாக கிராம உத்தியோகத்தர் உபுல் குமார, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்



தர் திருமதி ஜெனிதா பிரதீபன், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் சிறுவர்கள் சார்ந்த அபி விருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட வலையமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# வடமேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு!

## ஆளுநர் ஹாபிஸ் நசீர் அஹ்மட் தெரிவிப்பு



(ரஸீன் ரஸ்மின்)

வடமேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கையை எடுக்கப் படும் என்று வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நசீர் அஹ்மட் தெரிவித் தார்.

வடமேல் மாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட நசீர் அஹ்மட், மல் வத்து பிரிவு அனுநாயக்க விக்ரமா ராச்சி ஆயுள்வேத பல்கலைக்கழக வேந்தர் அதி வண. நியங்கொட விஜிதசிறி அனுநாயக்க தேரர் மற்றும் அஸ்கிரிய மஹா விகார பிரிவு மஹா நாயக்க தேரர் வரகாஹொட ஞானரத்ன தேரர் ஆகியோரை நேற்று முன்தினம் (13) சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது, இரண்டு பௌத்த மதத் தலைவர்களும் புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட வேண்டிய அபி விருத்தி திட்டங்கள் மற்றும் நல்லி ணக்க செயற்பாடுகள் உள்ளிட்டவை தொடர்பில் கலந்துரையாடினர்.

வடமேல் மாகாணத்துக்குப் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட தங் களின் சிந்தனை போக்கின்படி, தேசிய ஒருமைப்பாட்டுக்கு உங்களால் சிறந்த பங்களிப்பை ஆற்ற முடியும் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனவும் அவர்கள் இதன்போது தெரிவித்துள் ளனர்.

மேலும், வடமேல் மாகாணத் தில் தற்பொழுது நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க திட்டமிட்டுள்ளார் என்று ஆளுநர் நசீர் அஹ்மட் இங்கு குறிப்பிட்டார்.

இதன்மூலம் குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள பாட சாலைகளிலும் , பிரிவினாக்களிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் இதற்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ளார் என்றும் ஆளுநர் கூறினார்.

அத்துடன், வடமேல் மாகாணத்தின் சுற்றுலா வர்த்தகம் நூற்றுக்கு இரண்டு வீதமாக உள்ளது. அதனை மேம் படுத்தி பல நடவடிக்கைகளை மேற் கொள்வது ஒரு விசேட வேலைத் திட்டமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி ஊடாக பிரதேசத்தின் சுற்றுலா வர்த் தகத்தை முன்னேற்றி வடமேல் மாகா ணத்தின் பொருளாதாரத்தை மேம் படுத்த முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அன்னையர் தினத்தை முன்னிட்டு 16 பிள்ளைகளின் தாய் கௌரவிப்பு!

(பழுவூரான்)

அன்னையர் தினைத்தை முன்னிட்டு பற்றி மீடியா, கதிரவன் பட்டிமன்றப் பேரவை மற்றும் உதவும் கரங்கள் அமைப்பு ஆகியன ஒன் றிணைந்து மட்டக்களப்பு மகிழவெட்டுவான் கற்குடாவைச் சேர்ந்த திருமதி ஆத்தப் பிள்ளை வீரக்குட்டி (வயது – 83) என்னும் 16 பிள்ளைகளைப் பெற்ற தாய் ஒருவர் அவரது இல்லத்தில் இன்று புதன்கிழமை (15) வைத்துக் கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது அவருக்கு பொன்னாடை போர்த்தி, பரிசுப் பொருள்களை வழங்கி னர்.

இந்த நிகழ்வில் பற்றி மீடியா ஊடகத்தின் ஸ்தாபகர் எம்.சிவகுமார், கதிரவன் பட்டிமன்றப் பேரவைத் தலைவர் கதிரவன் த.இன்பராசா மற்றும் உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் எஸ்.ஜெயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.





# லொறியுடன் மோதிய பஸ் தீப்பிடித்தது ஆறு பேர் உடல்கருகி உயிரிழந்தனர்!

## ஆந்திர மாநிலத்தில் இன்று அதிகாலை விபரீதம்

அமராவதி,மே15

ஆந்திர மாநிலத்தில் லொறி மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பஸ் தீப்பற்றி எரிந்ததில் 6 பேர் உடல்கருகி உயிரிழந்தனர்.

ஆந்திர மாநிலம் பபட்லா மாவட்டம் சின்னகஞ்சம் பகுதியில் இருந்து ஐதராபாத் நோக்கி நேற்று இரவு ஆம்னி பஸ் புறப்பட்டது. அந்த பஸ்ஸில் 42 பேர் பயணித்தனர்.

பல்நாடு மாவட்டம் சில்லக்கல்ரி பேட்டை பகுதியில் இன்று அதிகாலை சென்றுகொண்டிருந்தபோது சாலையில் எதிரே வந்த லொறி மீது பஸ் அதி வேகமாக மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் பஸ் முழுவதும் தீப்பற்றியது.

அதிகாலை என்பதால் பயணிகள் அனைவரும் உறங்கிக்கொண்டி ருந்த னர். தீ மளமளவென பஸ் முழுவதும் பரவியது. இந்த விபத்தில் பஸ் டிரைவர், பயணிகள் என மொத்தம் 6 பேர் தீயில் உடல்கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த பொலிஸார் மற்றும் தீயணைப் புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். மேலும், படுகாயம டைந்தவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். மேலும், இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்ற னர்.

# செங்கல்பட்டு அருகே நடந்த 2 விபத்துகளில் 9 பேர் சாவு!

சென்னை,மே15

செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற இருவேறு விபத்துகளில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை வடபழனி அழகிரி நகர் பகுதியை சேர்ந்த விக்னேஷ், சூளைப்பள்ளம் எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்த ராஜேஷ் (22), ஏழுமலை (30), யுவராஜ் மற்றும் மற்றொருவர் என மொத்தம் 5 பேர் சென்னையில் இருந்து புதுச்சேரி வரை காரில் சென்றுவிட்டு திரும்பி சென்னை வந்து கொண்டிருந்தனர்.

அந்தக் கார் செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அருகே வாயலூர் பகுதியில் உள்ள கிழக்கு கடற்கரை சாலையில் வந்து கொண்டிருந்த போது மாடு குறுக்கே வந்துள்ளது. அதன் மீது மோதாமல் இருக்க காரை இடதுபுறமாக திருப்பிய போது சாலையோரம் இருந்த மரத்தின் மீது மோதி கார் நொறுங்கியது.

இதில் காரில் பயணம் செய்த ராஜேஷ், ஏழுமலை மற்றும் விக்னேஷ் ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்தை கண்ட வாயலூர் பகுதி மக்கள் காரில் சிக்கிக் கொண்டிருந்த மேலும் இருவரை இரும்பு அறுக்கும் இயந்திரம் மூலம் கார் சிதைவுகளை உடைத்து மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

ஆனால் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி யுவராஜ் (26) மற்றும் மற்றொரு இளைஞரும் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து 5 பேரின் உடல்களை மீட்ட பொலிஸ ார் பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



இதேபோல் இன்று அதிகாலை செங்கல்பட்டு மாவட்டம் சிலாவட்டம் பகுதியில், பண்ருட்டியை நோக்கி சென்று கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி பகுதியை சேர்ந்தவர் அப்துல் சமத். இவர் சவுதிக்கு கிளம்பிய நிலையில், அவரை வழி அனுப்ப அவரது மனைவி ஜெய் பினிஷா (40), மகன்கள் மிச்சால் (20), பைசல் (12), மற்றும் மகன் அத்தல் (16) ஆகியோர் சென்னை விமான நிலையம் சென்றிருந்தனர். அவரை வழியனுப்பி விட்டு காரில் பண்ருட்டி திரும்பி கொண்டிருந்தனர். காரை சரவணன் (50) என்பவர் ஓட்டி வந்தார்.

அந்த கார் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே வந்த போது முன்னே சென்ற லாரி மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே டிரைவர் சரவணன், ஜெய் பினிஷா, மிச்சால், பைசல் ஆகியோர் உயிரிழந்தனர்.

அருகில் இருந்த மக்கள் காரில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அத்தல் என்பவரை மீட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசா ரணை நடத்தி வருகின்றனர்.




# பிரான்ஸில் 2 பொலிஸாரைச் சுட்டுக்கொன்று கைதியை அதிரடியாக மீட்டுச் சென்ற கும்பல்!

பிரான்சின் தெற்கு நகரமான மார்சேயில் கொள்ளை சம்பவம் தொடர்பாக முகமது அம்ரா என்பவரை பொலிஸார் கைது செய்தனர். இவர் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. இதற்கிடையே அவரை நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜர் படுத்திவிட்டு சிறைக்குப் பொலிஸார் அழைத்துச் சென்று கொண்டிருந்தனர்.

முகமது அம்ரா அழைத்து செல்லப் பட்ட சிறைத்துறை வான், வடக்கு பிரான்ஸின் இன்கார்வில்லே பகுதியில் உள்ள சுங்கச்சாவடியில் நின்றது. அப்போது அங்கு கார்களில் கும்பல் ஒன்று வந்தது. அவர்கள் சிறைத்துறை வான் மீது தங்களது வாகனங்களை மோதினர்.

முகமூடி அணிந்திருந்த அக் கும் பலை சேர்ந்தவர்கள், பொலிஸார் மீது துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இந்த தாக்குதலில் 2 பொலிஸ் அதி காரிகள் பலியானார்கள். 3 பேர் காயம் அடைந்தனர். உடனே சிறைத்துறை வானில் இருந்த கைதி முகமது அம்ராவை அக்கும்பல் மீட்டு கொண்டு தப்பி சென்றது.

இச்சம்பவம் பிரான்ஸில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. முகமது அம்ரா மற்றும் அவரை மீட்டு சென்ற கும்பலை பொலிஸார் தீவிர மாகத் தேடி வருகிறார்கள். இதில் நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படை யினர் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து அதிபர் இம்மானுவேல் மெக்ரான் கூறும்போது, "குற்ற வாளி களைக் கண்டுபிடிக்க அனைத்து நடவ டிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.

# ரஷ்ய அதிபர் புடின் நாளை சீனாவுக்கு!

## இரண்டு நாள்கள் விஜயமாகப் பயணம்

மொஸ்கோ,மே15

ரஷ்ய அதிபர் புடின் நாளை வியாழக் கிழமை சீனாவுக்கு செல்கிறார். இரண்டு நாள்கள் அங்கு தங்கும் அவர் அதிபர் ஜின்பிங் மற்றும் உயர் அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா போர் கடந்த 2022 ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளும் செயல்படுகின்றன. இந்த நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன. இதற்கு பதிலடியாக ரஷ்யாவும் அந்த நாடுகள் மீது பொருளாதார தடை விதித்தது.

தொடக்கம் முதலே இந்த போரில் நடுவுநிலைமை வகிப்பதாக சீனா கூறியது. அதன்படி ரஷ்யாவுக்கு ஆயு தங்கள் ஏற்றுமதி உள்ளிட்டவற்றை சீனா செய்யவில்லை. எனினும் ஐரோப் பிய நாடுகள் விதித்து வந்த பொருளாதார தடைக்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அதேபோல் உக்ரைனுக்கு எதிராக போர் முயற்சிக்கு பயன்படும் எந்தி ரங்கள், மின்னணு பொருள்கள் உள்ளிட்டவற்றை சீனா



ஏற்றுமதி செய்து வருகிறது. இதன் மூலம் மறைமுகமாக ரஷ்யாவுக்கு சீனா உதவுகின்றது.

இந்தநிலையில் சீன அதிபர் ஜின்பிங் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு அழைப்பு விடுத்தார். அதன் பேரில் அதிபர் புதின் நாளை வியாழக்கிழமை சீனாவுக்கு செல்கிறார்.

5 ஆவது முறையாக அதிபர் பதவி ஏற்ற பிறகு அதிபர் புடின் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும். இந்த சந்திப்பின்போது இரு நாடுகள் இடையே பல்வேறு துறைகளில் ஒத்து ழைப்பு, சர்வதேச மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் குறித்து விவாதிக் கப்படவுள்ளதாக சீன வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

புதன்கிழமை 15/05/2024

## ஒட்டாவா நகர சபையில் இஸ்ரேலிய தேசிய கொடி

ஒன்ராரியோ, மே 15

இஸ்ரேலிய தேசிய தினத்தைக் குறிக்கும் வகையில் ஒட்டாவா நகர சபையில் இஸ்ரேலிய தேசிய கொடி ஏற்றப்பட்டுள்ளது.

C2



# அல்பேர்ட்டாவில் மோசமான காட்டுத்தீ ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

**அல்பேர்ட்டா, மே 15**

**அல்பேர்ட்டாவில் காட்டுத்தீயின் காரண மாக ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந் துள்ளனர்.**

**அல்பேர்ட்டாவின் தென்பகுதியில் உள்ள ஃபோர்ட் மெக்முர்ரே பகுதியில் இருந்தே மக்களை வெளியேறுமாறு பணிக்கப்பட் டுள்ளது.**

வூட் பஃபலோ பகுதியில் பீக்கன் ஹில், அபசான்ட், பிரயார் கிரிக் மற்றும் கிரேலிங் டெர்ரஸ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களையே வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.எட்டுவருடங்க ளுக்கு முன்னர் ஏற்பட்ட தைப் போன்று மிகவும் மோசமான காட்டுத்தீ ஏற்படலாம் என அப்பகுதி அதிகாரிகள் அஞ்சுகின் றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவின் பூர்வீகக் குடிகளின் அடையாளத் திருட்டை நிறுத்துக

## மூன்று நாள்கள் மாநாட்டில் வலியுறுத்து

ஒன்ராரியோ, மே 15

பூர்வீகக் குடிகளின் அடையாள மோசடி தொடர்பான மூன்று நாள்கள் செயலமர்வில் மேட்டிஸ் பூர்வீகக் குடியினருக்கு எதிரான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேட்டிஸ் பூர்வீகக் குடிகள் எனப்படும் மாகாண அமைப்புடன் கனடிய அரசாங் கம் தமது தொடர் புகளை துண்டிக்க வேண்டும் என இந்த தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், 2017ஆம் ஆண்டில் ஒன ராரியோ அரசாங்கத்தின் அங்கீகரிக்கப் பட்ட புதிய ஆறு சமூகங்களையும் விலக் குமாறும் அந்த தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பூர்வீகக் குடிகளின் அடையாளத் திருட்டை அனுமதிக்கும் நிகழ்வுகளை நிறுத்த வேண்டும் என்பதும் இந்த தீர் மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு முக்கிய விடயமாகும்.





# டொரன்டோவின் தலைமை மருத்துவர் வருட இறுதியில் பதவி விலகுகின்றார்

ஒன்ராறியோ, மே 15

டொரன்டோவின் தலைமை மருத்துவராக பணியாற்றி வரும் எலென் டி வில்லா பதவியில் இருந்து விலகப்போகிறார் என அறிவித்துள்ளார்.

கொவிட்-19 பெருந்தொற்று காலத்தில் டொரன்டோவில் தலைமை மருத்துவராக செயல்பட்ட அவர் தாம் விரைவில் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என செவ்வாய்க்கிழமை சமூக ஊடக வழியாகத் தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டு முதல் டொரன்டோவின் தலைமை மருத்துவ அதிகாரியாக வில்லா பணிபுரிந்து வருகின்றார்.

கனடாவின் மிகப்பெரிய உள்ளூர் பொது சுகாதாரப் பிரிவை வழிநடத்த கிடைத்த சந்தர்ப்பத்திற்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இறுதியுடன் தாம் பதவி விலகப்போகிறார் அவர் அறிவித்துள்ளார்.

# கனடிய உளவு நிறுவன ஊழியர்களின் முறைப்பாடுகள் குறித்துப் பரிசீலனை

ஒன்ராறியோ, மே 15

கனடிய உளவு நிறுவனத்தின் ஊழியர்களினால் முன்வைக்கப்பட்ட தொந்தரவுகள் தொடர்பான 24 முறைப்பாடுகளை கடந்த வருடம் விசாரணை செய்துள்ளதாக கனடிய உளவு நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை நிறுவனத்தின் வினைத்திறனை விமர்சிப்பதற்கான அளவுகோலாக பயன்படுத்தப்படக் கூடாது என கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவைகளின் பிரதான மனிதவள அதிகாரி தெரிவித்துள்ளார்.

நிறுவனத்தின் உள்ளகக் குறைகேள் பொறியமைப்பின் மீது ஊழியர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையே இந்த முறைப்பாடுகள் வெளிப்படுத்துகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறுவனத்தின் பணிச்சூழல் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் இந்த விசாரணைகள் உதவுவதாக அவர் கூறியுள்ளார்.

## ஒட்டாவா நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டாவார நகர சபையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு முன்னதாக இஸ்ரேலியக் கொடி ஏற்றப்பட்டது.

இஸ்ரேல் சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் தனிப்பட்ட நிகழ்வொன்று செவ்வாய் மாலை நடைபெற்றது.

இதனால் நகர மண்டபத்தில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஒட்டாவா நகர சபையில் இஸ்ரேலிய தேசிய கொடி ஏற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்று நடைபெறுகிறது.





# காட்டுத்தீயின் பாதிப்புகள் குறித்து மனிடோபா முதல்வர் நேரில் ஆய்வு

மனிடோபா, காட்டுத்தீயால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மனிடோபாவின் முதல்வர் வெப் நீவ் பார்வையிட்டுள்ளார்.

வடக்கு மனிடோபாவில் எரியும் ஒரு பெரிய காட்டுத்தீயின் அழிவை முதல்வர் நீவ் நேற்று செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார்.

அங்கு கடந்த வாரம் முதல் ஏற்பட்ட காட்டுத் தீயின் சேதங்களை அவர் பார்வையிட்டார். சுமார் 35 ஆயிரம் ஹெக்டயர் அளவு காடு தீயினால் கருகியுள்ளது. 550 பேர் வரை இடம் பெயர்ந்துள்ளனர்.

காட்டுத்தீ காரணமாக அங்கு பல பகுதிகளில் வெளியேற்ற உத்தரவு அமுலில் உள்ளது. தீயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு வழங்கப்படும் என முதல்வர் உறுதியளித்துள்ளார்.



# அமெரிக்காவில் கனடியப் பிரதமரின் உரை சர்வதேச தொழிற்சங்கங்களின் மாநாட்டில்

ஒன்ராரியோ, மே 15

பிளடெல்பியாவில் நடைபெறவுள்ள சர்வதேச தொழிற்சங்கங்களின் மாநாட்டில் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உரையாற்றவுள்ளார்.

இந்த உரையின் போது அமெரிக்காவுடன் கனடாவின் வர்த்தக உறவுகளை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மே 21ஆம் திகதி நடைபெறவுள்ள வடஅமெரிக்க மாநாட்டில் உரையாற்றுவதற்கு பிரதமருக்கு அழைப்பு கிடைத்துள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் பணிகள் தீவிரமாகியுள்ள நிலையில், பிரதமரின் இந்த விஜயம் திட்டமிடப்பட்டுள்ளது.




# வெளிநாட்டவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதிகள் வழங்குவதைக் குறைக்கும் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பு!

## பிரின்ஸ் எட்வேர்ட் தீவு மாகாணத்தில்

கனேடிய மாகாணமொன்று வெளிநாட்டவர்களுக்கெதிராக எடுக்க இருக்கும் முடிவொன்றை எதிர்த்து புலம்பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில், தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் என அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கனடாவின் Prince Edward Island மாகாணம், 2024, அதாவது, இந்த ஆண்டில், மாகாண பிரேரிப்புத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதிகளின் எண்ணிக்கையை 25 சதவிகிதம் குறைக்க இருப்பதாக அறிவித்துள்ளது. மருத்துவ அமைப்புக்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் மற்றும் வீடுகள் தட்டுப்பாடு காரணமாக இந்த முடிவை எடுக்க இருப்பதாக அம்மாகாணம் அறிவித்துள்ளது.

மருத்துவத் துறையில் பணியாற்றுவோர் மற்றும் கட்டுமானப் பணி செய்வோர் போன்ற சில துறையினருக்கு மட்டுமே நிரந்தரக் குடியிருப்பு அனுமதி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படஉள்ளதாக மாகாண அரசு அறிவித்துள்ளது. அதன் பொருள் என்னவென்றால், அடுத்த சில மாதங்களில், மற்ற துறையில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்தோரின் பணி அனுமதிகள் நீட்டிக்கப்படாமல் போக வாய்ப்புள்ளது என்பதுதான்.

ஆகவே, மாகாண அரசின் இந்த முடிவை எதிர்த்து தலைநகர் Charlottetown இல் புலம்பெயர்ந்தோர் பலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றுள்ளவர்களில் ஒருவரான ரூபிந்தர் பால் சிங்





என்பவர் கூறும்போது, நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்துவரும், பணி செய்துவரும் புலம்பெயர்ந்தோரின் பணி அனுமதியை நீட்டித்தல் முதலான தங்கள் கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற, இம்மாதம், அதாவது, மே மாதம் 16ஆம் திகதிவரை காலக்கெடு வைத்துள்ளதாக தெரிவித்தார்.

மாகாண அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் எங்களை ஏமாற்றிவிட்டது என்று கூறும் அவர், அவர்கள் எங்களுக்கு பொய்யான தகவல்களைக் கொடுத்துவிட்டார்கள், இது துஷ்பிரயோகச் செயலாகும் என்கிறார்.

அத்துடன், நாளை மே மாதம் 16ஆம் திகதி எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், நாங்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளோம் என்றும் கூறுகிறார் அவர்.



# கனடாவில் தற்காலிக விசாவில் தங்கியுள்ள பலருக்கும் நிரந்தர குடியுரிமை கிடைக்கும்

கனடாவில் தற்காலிக விசாவில் உள்ள பலருக்கு நிரந்தர குடியுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்காக நிரந்தர வதிவிட நிலையை அதிகரிப்பதே இதற்கான சிறந்த தீர்வு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலானவர்கள் இதில் உள்ளடக்கப்படவுள்ள போதிலும் சிலர் தவிர்க்கப்படுவார்கள் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மார்க் மில்லர் புதிய தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையில் வரம்புகளை நிர்ணயிப்பதற்கான திட்டத்தை அறிவித்தமையிலிருந்து முதல் முறையாக தனது மாகாண மற் றும் பிராந்திய அதிகாரிகளை அமைச்சர் சந்தித்துள்ளார்.

வீட்டுச் சந்தை மற்றும் பிற சேவைகள் மீது ஏற்படுத்தியுள்ள அழுத்தத்தை குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# வாகனத் திருட்டில் ஈடுபடுபவர்களுக்கு புதிய தண்டனை விதிக்கப் பரிந்துரை

## சாரதி உரிமத்திற்கு நீண்ட காலத் தடை வரும்



கனடாவில் வாகனத் திருட்டில் ஈடுபடுவோருக்குப் புதிய தண்டனை விதிப்பது குறித்துப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வாகனத் திருட்டில் ஈடுபடும் நபர்களின் சாரதி உரிமத்திற்கு நீண்ட காலத் தடை விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண போக்குவரத்து அமைச்சர் ப்ராம்பீட் சர்காரீயா மற்றும் தலைமை வழக்குரைஞர் மைக்கல் கெரென்ஸீர் ஆகியோர் இந்தப் புதிய சட்ட ஏற்பாடு குறித்து விளக்கம் அளிக்க உள்ளனர்.

வாகன அபகரிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவருக்கு பத்தாண்டுகள் சாரதி உரிமத்தை ரத்து செய்யவும், இரண்டாவது தடவை தவறிழைத்தால் அந்த தடையை 15 ஆண்டுகளாக நீடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றாவது தடவையாக வாகனக் கொள்ளையில் ஈடுபடுவோரது சாரதி உரிமத்தை வாழ் நாள் முழுவதிலும் தடை செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் ஒவ்வொரு 14 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் கார் ஒன்று களவாடப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.